ஆர். வனிதா குமாரி பங்கேற்பு! பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறி! சட்டம்–ஒழுங்கு சீர்கேடு! போதைப்பொருள் புழக்கம்! விலைவாசி உயர்வு! த.வெ.க. அரசைக் கண்டித்து

சென்னை கிழக்கு-வடக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தலைமையில் கண்டனப் பேருரையாற்றுகிறார்!

மகளிர் அணியினர், மகளிர் தொண்டரணியினர் மற்றும் கழக மகளிர்கள் பெருந்திரளாகப் பங்கேற்க சென்னை கிழக்கு-வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. - ஆர்.டி. சேகர் வேண்டுகோள்!

சென்னை,அக்.30-

சென்னை கிழக்கு-வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் பி. கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. - ஆர்.டி. சேகர் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், தலைமைக் கழகத்தின் அறிவிப்பின்படியும், தமிழ் நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக எழுந்துள்ள அச்சம், சட்டம்-ஒழுங்கு சீர் கேடு, போதைப்பொருள் புழக்கம், அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு மற்றும் அறிவிக்கப் படாத மின்வெட்டு உள் ளிட்ட மக்கள் நலப் பிரச்சி னைகளைக் கண்டித்து, சென்னை கிழக்கு-வடக்கு மாவட்ட மகளிர் அணி மற் றும் மகளிர் தொண்டரணி சார்பில், வருகின்ற 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில், சென்னை மாவட்ட ஆட்சி யர் அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெறவுள் ளது.

இந்த மாபெரும் கண் டன ஆர்ப்பாட்டத்திற்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம். பி. அவர்கள் தலைமை யேற்று, த.வெ.க. அரசின் செயல்பாடுகளைக் கண் டித்து கண்டனப் பேருரை யாற்றுகிறார். ஆர். வனிதா குமாரி அவர்கள் பங்கேற்கி றார்.

த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங் கள்கூட நிறைவடையாத நிலையில், பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒ ழுங்கு, போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் மக்களின் வாழ்வாதாரம் தொடர்பா கப் பல்வேறு கேள்விகள்





எழுந்துள்ளன. கொலை, கொள்ளை, பாலியல் வன் முறை, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற் றங்கள், குழந்தைகள் கடத் தல் உள்ளிட்ட சம்பவங்கள் பொதுமக்களிடையே அச் சத்தை ஏற்படுத்தியுள்ளதா கப் புகார்கள் எழுந்துள் ளன.

பெண்களின் பாதுகாப் புக்காக உருவாக்கப்பட்ட தாகக் கூறப்படும் 'சிங்கப் பெண்' சிறப்புப் படையின் செயல்பாடுகள் குறித்தும், பெண்களுக்கு எதிரான குற் றங்களைத் தடுப்பதற்காக அரசு மேற்கொண்ட நடவ டிக்கைகள் குறித்தும் உரிய விளக்கம் அளிக்க வேண் டும்.

மேலும், ஆட்சியின் கு றை பா டு க ளை ச் சுட்டிக்காட்டும் எதிர்க்கட் சியினர் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது பழிவாங்கும் நோக்கில் கைது நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படு வதாக எழுந்துள்ள குற்றச் சா ட் டு க ளு ம் கவலையளிக்கின்றன.

இளைஞர்களின் எதிர்கா லத்தைப் பாதிக்கும் போதைப்பொருள் புழக்கத் தைக் கட்டுப்படுத்தவும், பள்ளி-கல்லூரி மாணவர்க ளைப் பாதுகாக்கவும் உறுதி யான நடவடிக்கைகள் தேவை. போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை யில் ஈடுபடுவோர் மீது பார பட்சமின்றிக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒருபுறம் பெண்களின் பாதுகாப்பு குறித்த அச்சம்! மறுபுறம் விலைவாசி உயர் வால் குடும்பங்களின் வாழ் வாதாரச் சுமை!

அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், பால், காய்கறி கள் உள்ளிட்ட அத்தியாவ சியப் பொருட்களின் விலை உயர்வால் ஏழை, எளிய மற் றும் நடுத்தரக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள் ளன. நியாயவிலைக் கடை களில் அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றிக் கிடைப்பதையும், விலைவா சியைக் கட்டுப்படுத்துவ தையும் அரசு உறுதிசெய்ய வேண்டும்.

மின்கட்டண உயர்வு, அறிவிக்கப்படாத மின் வெட்டு மற்றும் மின்பற்றாக்குறை காரண மாகப் பொதுமக்கள், சிறு வணிகர்கள், குறு தொழில் நிறுவனங்கள் என அனைத் துத் தரப்பினரும் பாதிக்கப் படுவதாகப் புகார்கள் எழுந் துள்ளன. தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிசெய்வதோடு, மின் கட்டணச் சுமையைக் குறைக்கவும் அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

பெண்களின் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு பெண் ணின் அடிப்படை உரிமை! சட்டம்-ஒழுங்கைப் பாது காப்பதும், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதும், மக்க ளின் வாழ்வாதாரத்தை உறு திசெய்வதும் அரசின் தவிர்க்க முடியாத கடமை!

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தியும், த.வெ.க. அரசின் செயல்பாடுகள் குறித்து எழுந்துள்ள மக்கள் நலக் குற்றச்சாட்டுகளுக்கு உரிய பதிலளிக்க வலியுறுத் தியும் இந்த மாபெரும் கண் டன ஆர்ப்பாட்டம் நடை பெறுகிறது.

எனவே, வருகின்ற 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில், சென்னை மாவட்ட ஆட்சி யர் அலுவலகம் அருகில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம். பி. அவர்கள் தலைமை யேற்று கண்டனப் பேருரை யாற்றும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத் தில், சென்னை கிழக்கு-வடக்கு மாவட்டங்களுக் குட்பட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர் வாகிகள், கழக மகளிர் அமைப்பினர், உள்ளாட்சி அமைப்புகளின் மகளிர் பிர திநிதிகள் மற்றும் கழகத் தோழியர்கள், தோழர்கள் அனைவரும் பெருந்திரளா கப் பங்கேற்குமாறு அன்பு டன் கேட்டுக்கொள்கி றோம்.

இவ்வாறு சென்னை கிழக்கு-வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் பி. கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. மற்றும் ஆர்.டி. சேகர் ஆகி யோர் தங்களது கூட்டறிக்கையில் தெரிவித் துள்ளனர்.

அறிவுடைமையின் அருமை புரியாதவர்கள் நடத்தும் ஆட்சியில்

கலைஞர்களும் கல்வியாளர்களும் வஞ்சிக்கப்படுவார்கள்!

பொருளாதார அறிஞர் கலையரசன் கைதைக் கண்டித்து – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலைதளப்பதிவு !

சென்னை, அக்.30–

பேராசிரியரும் பொருளாதார அறிஞருமான கலையரசன் அராஜகமான முறையில் நேற்று கைது செய்யப்பட்டதையடுத்த விடுத்த வலைதளப்பதிவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., 'அறிவுடைமையின் அருமை புரியா தவர்கள் நடத்தும் ஆட்சியில் கலைஞர்களும் கல்வியாளர்களும் வஞ்சிக்கப்படு வார்கள்!" எனத் தமது வேதனையை வெளிப்படுத்தி யுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:–

பேராசிரியரும் பொருளாதார அறிஞருமான கலையரசன் அவர்களை நேற்று அதிகாலை-யில் பொய்க் குற்றச்சாட்டுகளைக் கூறி அராஜகமான முறையில் கைது செய்து, அலைக்கழித்து, மன உளைச்ச லுக்கு ஆளாக்கியுள்ள தவெக அரசுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



விலைவாசி உயர்வு, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என இந்த அரசின் நிர்வாகச் சீர்கேடுகளை விமர்சிக்கும் எவர் ஒருவரும் காவல்துறையின் அச்சுறுத்த லுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்ற மிரட்டலாகத்தான் இந்தக் கைது சம்பவம் இருக்கிறது.

அறிவுடைமையின் அருமை புரியாதவர்கள் நடத்தும் ஆட்சி யில் கலைஞர்களும் கல்வியாளர் களும் வஞ்சிக்கப்படுவார்கள்.

த.வெ.க.வின் ஆட்சி அப்படி யானதே!

இவ்வாறு அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை மேயர் பிரியா ராஜன் – நிவேதா ஜெசிகா பங்கேற்பு:

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிக்கை!

காஞ்சிபுரம், அக்.30 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி,மகளிர் தொண்ட ரணி சார்பில் காஞ்சிபுரம் தாலுக்கா அலுவலகம் எதி ரில் தமிழ்நாட்டில் த. வெ.க.ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண் கள் குழந்தைகள் பாது காப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது, இந்த ஆர்பாட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு மாவட் டக் கழகச் செயலாளர் க. சுந்தர் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மாவட் டச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் அவர் களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலா ளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுத லின்படி, திமுக நாடாளு மன்றக் கழகக் குழு தலை வர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனி மொழி ராஜாத்தி கருணா நிதி எம்.பி., அவர்களின் அ றி வு று த் த லி ன் ப டி நாளை (31.10.2026 சனிக் கிழமை,) காலை 9.00 மணியளவில், காஞ்சிபு ரம்,நடுத் தெரு வில் உள்ள தாலுக்கா அலுவலகம் எதி ரில் காஞ்சிபுரம் மாநகர மேயர் திருமதி.மகாலட் சுமி யுவராஜ் தலைமை யில், காஞ்சிபுரம் மாநகர் 18. வது வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா ராம கிருஷ்ணன் வரவேற்பு ரையில் காஞ்சிபுரம் தெற்குமாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பா ளர் திருமதி ஆ.செல்வி, மாவட்ட திமுக மகளிர் தொண்டர் அணி அமைப் பாளர் திருமதி மாலதி



செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட் டம் நடைபெறுகின்றது.

இந்த கண்டன ஆர்ப் பாட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், நிவேதா ஜெசிகா ப ங் கே ற் று சி ற ப் பு ரை யா ற் று கின்றனர்.

இக் கண்டன ஆர்பாட் டத்தில் நான் (மாவட்டச் செயலாளர் க.சுந்தர்)கண் டன ஊரையாற்றுகி றேன்.

மேலும் இந்த கண்டன ஆர்பாட்டத்தில். திருமதி மலர்விழி குமார், திருமதி. எஸ் எழிலரசி சுந்தரமூர்த்தி. செம்ப ருத்தி துர்கேஷ்,நித்யா சு கு மா ர், ம ல ர் கொ டி குமார்,ஹேமலதா ஞான சேகர்,சாந்தி ராமச்சந்தி ர ன் , , இ ல் ல ா ம ல் லி ஸ்ரீதர்,நந்தினி கரிகாலன், சம்யுக்தா அய்யனார்,சசி கலா கணேஷ், சாந்தி சீனி வாசன், வசந்தி குமார்,திவ்யா இளமது, ராஜலட்சுமிகுஜராஜ், கற் பகம் பாஸ்கர், விஜயலட் சுமி ராபர்ட், ரத்னா மாலா சங்கர், சாந்தா, பத்மா, கண்ணகி, பவ்யா, ஜெயந்தி,

பி.நிர்மலா எம்.சி., கவிதா டெல்லிபாபு, மகா லட்சுமி ராஜசேகர், பி.தனலட்சுமி, நித்யா சுதாகர், சுமித்ரா சங்கர், சரஸ்வதி தேவப்பிரகாஷ், அஸ்மாபேகம், இலக்யா சுகுமார், பிரியா குழந்தை வேலு, சித்ரா ராமச்சந்தி ரன், சரஸ்வதி பாலமுரு கன், ஷர்மிளா, சோபனா கண்ணன், ரமணி பொன் னம்பலம், சரளா சம்பத், கயல்விழி சூசையப்பர், பூங்கொடி தசரதன், , விஜ யாரவி, எல்.காயத்ரி, சீதா மயில்வாகனம், கீதா அழ கேசன், லலிதா சங்கரி , எல்.காயத்ரி, எஸ். திரிபுரசுந்தரி, ஜீனத், அஞ் சுகம், பரமேஷ்வரி, தன பாக்கியம், ரம்யா, பானுப்பிரியா, ஷாலினி, சசிகலா கிருஷ்ணன், பிரி யாஅமலநாதன், திலகம், கண்ணகி உள்பட மாவட்ட மகளிர், மகளிர் தொண்டர் அணி தலை வர்கள், துணை தலைவர் கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் உள் பட காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மகளிர் அனை வரும் திரளாக கலந்து கொண்டு

பாதுகாப்பற்ற மாநில மாக தமிழ்நாட்டை படு குழியில் தள்ளி உள்ள த. வெ.க அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர் பாட்டத்தில் கண்டன முழக்கமிடுகின்றனர்.

இந்த ஆர்பாட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பி னர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட மாநகர- ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக மக ளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலை வர்கள், துணை தலைவர் கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, மாந கர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் துணை செயலாளர்கள், முன்னாள் இந்நாள் மக ளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் மாந கர மேயர், பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மண்டல குழு தலைவர் கள், மாநகராட்சி, நக ராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர் கள், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள், துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர், மகளிர் அணி உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வா கிகள், தோழர்கள், கழக முன்னோடிகள் அனைவ ரும் தவறாமல் பெருந்திர ளாக கலந்து கொள்ளு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந் தர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

பேராசிரியர் கலையரசன் கைது!

கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நெரிக்க முயலுவதா?

மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, அக்.30-

பேராசிரியர் கலையர சன் கைதின் மூலம் கருத்துச் சுதந்திரத்தின் குரல் வளையை நெரிக்க முயலும் நடவடிக்கைக்கு கடும் கண் டனம் தெரிவித்து

மனிதநேய மக்கள் கட்சி யின் தலைவரும் சட்ட மன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம். எச். ஜவா ஹிருல்லா அறிக்கை விடுத் துள்ளார்.

அவரது அறிக்கை வரு மாறு:

புகழ்பெற்ற சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவ னத்தின் (MIDS) பேராசிரிய ரான முனைவர் கலையர சன் அவர்கள், காவல்துறை யினரால் அதிகாலையில் கைது செய்யப்பட்டதாக வெளியாகியுள்ள செய்தி பெரும் அதிர்ச்சியளிக்கி றது. சீருடை அணியாத காவலர்கள் அவரைக் கைது செய்து வாடகை வாகனத் தில் அழைத்துச் சென்றது கடும் கண்டனத்திற்குரியது.

பேராசிரியர் கலையர சன் சாதாரணமான கல்வி



யாளர் அல்ல. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முனை வர் பட்டம் பெற்றவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழ கப் பதிப்பகத்தால் வெளியி டப்பட்ட *The Dravidian Model* நூலின் ஆசிரியர்களில் ஒருவர். ஒன்றிய அரசின் திட்டக்குழுவில் பணியாற் றியதோடு, தமிழ்நாடு அர சின் பொருளாதார ஆய்வ றிக்கை தயாரிப்பிலும் பங்களித்தவர். தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையி லான மாநில காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவிலும் உறுப்பினராக உள்ளவர்.

அரசின் பொருளாதாரக் கொள்கைகளையும் விலை வாசி உயர்வையும் விமர் சிப்பது குற்றமல்ல; அது ஜனநாயகத்தின் அடிப் படை உரிமை!

திராவிட மாடல் ஆட்சி யின் பொருளாதாரச் சாத னைகள் குறித்து ஆய்வு செய்தவரும், அரசின் கொள்கைகள் குறித்து கருத் துத் தெரிவிக்கும் உரிமை கொண்டவருமான ஓர் அறி ஞர், தனது விமர்சனக் கருத் துகளுக்காகக் குறிவைக்கப் பட்டிருப்பது கருத்துச் சுதந் திரத்தின் மீதான நேரடித் தாக்குதலாகும். ஆட்சியா ளர்களுக்குப் பிடிக்காத கருத்துகளை முன்வைப்ப வர்களை அச்சுறுத்துவதன் மூலம் விமர்சனங்களை ஒடுக்கிவிடலாம் என்று எந்த அரசும் நினைக்கக் கூடாது.

முந்தைய ஆட்சிக் காலங் களிலும் சுதந்திரமாகக் கருத் துகளை முன்வைத்ததாக அறியப்படும் பேராசிரியர் கலையரசன் போன்ற கல்வி யாளர்களின் கருத்துகளை எதிர்கொள்வதற்குப் பதி லாக, அவர்களைக் கைது செய்து அச்சுறுத்தும் போக்கு ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. அரசின் செயல் பாடுகளை விமர்சிக்கும் உரிமை கல்வியாளர்களுக் கும் பத்திரிகையாளர்களுக் கும் மட்டுமல்ல; ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு.

காவல்துறை என்பது ஆட்சியாளர்களின் அரசி யல் விருப்பங்களை நிறை வேற்றும் கருவி அல்ல; சட் டத்தையும் குடிமக்களின் உரிமைகளையும் பாதுகாக் கும் அமைப்பு. கைது நடவ டிக்கையில் சட்ட நடைமு றைகள் மீறப்பட்டிருந்தால், அதற்குப் பொறுப்பானவர் கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஜனநாயகத்தில் அரசை விமர்சிப்பது குற்றமல்ல; விமர்சனத்தை ஒடுக்க அதி காரத்தைப் பயன்படுத்துவ துதான் ஜனநாயகத்தின் மாண்பைக் கேள்விக்குள் ளாக்கியுள்ளது.

இவ்வாறு அவர் தனது அ றி க் கை யி ல் குறிப்பிட்டுள்ளார்.

பாருங்க ப்ரோ, ரெக்கார்ட் பிரேக்கர் ப்ரோ..

பாத்தீங்களா எங்க தலைமைத் தற்குறியின் தரங்கெட்ட ஆட்சியில் விலைவாசில எப்படி தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதலிடத்திற்கு கொண்டு வந்திருக்கோம்..

-தி.மு.க. ஐ.டி. விங் பதிவு!





